# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 25, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தவெகவின் முக்கியத் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான 'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக இல்லத்தரசிகளுக்கு ஆண்டுக்கு மூன்று விலையில்லா சமையல் எரிவாயு உருளைகள் முதல்வர் என வழங்கப்படும் ச.ஜோசப் விஜய் அறிவித்தார்.

i. அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகை முதல் இந்தத் திட்டம் நடைமுறைக்குவரும், 1.30 கோடி குடும்பங்கள் பயன் பெறும் என பேரவையில் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக பேரவையில் விதி எண் 110-இன் கீழ் முதல்வர் விஜய் வெளியிட்ட அறிவிப்பு:

- தவெக அரசால், பெண்களின் முன்னேற்றத்துக் காகவும், பாதுகாப்புக்காகவும் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி, சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படைத் திட்டம், தாய்மாமன் மோதிரம் திட்டம், 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டம், அண்ணன் சீர் திட்டம் போன்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.
- முதல்கட்டமாக, 'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டத்தில் ஆண்டுக்கு 3 விலையில்லா எரி வாயு உருளைகள் வழங்கப்படும். அதற்கான தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.
- முன்பதிவு செய்து, எரிவாயு உருளை பெற்றவுடன் எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து பட்டியல் பெற்று, அதற்கான தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- இந்தத் திட்டத்தால் சுமார் 1,30,16,104 குடும்பங்கள் பயன் அடையும். வரும் பொங்கல் பண்டிகையையொட்டி ஜனவரி மாதம் முதல் இந்தத் திட்டம் செயலாக்கத்துக்கு கொண்டுவரப்படும். இதற்காக ஆண்டுதோறும் சுமார் ரூ.4,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்றார்.

ii. யாருக்கெல்லாம் கிடைக் கும் ?

- ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்துக்கு மிகாமல் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குடும்பத்தினர், குறு, சிறு விவசாய குடும்பத்தினர், மாற்றுத்திறனாளி குடும்பத்தினர் போன்ற சமூகத்தில் உள்ள நலிந்த

குடும்பத்தினருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் விலையில்லா எரிவாயு உருளை வழங்கப்படும் என முதல்வர் ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்

iii. ஆந்திர மாநிலத்தில் 'தீபம்' திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு 4 மாதங்களுக்கு ஒருமுறை வீதம் ஆண்டுக்கு மூன்று இலவச எரிவாயு உருளைகள், உத்தர பிரதே சத்தில் பிரதமரின் உஜ்வலா திட்டப் பயனாளிகளுக்கு ஆண்டுக்கு இரு இலவச எரிவாயு உருளைகள், மகாராஷ்டிரத்தில் 'முதல்வரின் அன்னபூரணி யோஜனா' திட்டத்தின் கீழ் பெண்களுக்கு ஆண்டுக்கு 3 இலவச எரிவாயு உருளைகள், உத்தரகண்டில் 'அந்தியோதயா' திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 3 இலவச எரிவாயு உருளைகள் வழங்கப்படுகின்றன. இந்த மாநிலங்கள் வரிசையில் தமிழகமும் இப்போது இணைந்துள்ளது.

2. வெற்றிப் பயணம் திட்டத்தின் கீழ் புறநகர் பேருந்துகள், விரைவுப் பேருந்துகள் (எக்ஸ்பிரஸ்), எல்எஸ்எஸ் மற்றும் டீலக்ஸ் பேருந்துகளிலும் மகளிர் இனி கட்டணமில்லாமல் பயணிக்கலாம் என்று முதல்வர் ஜோசப் விஜய் பேரவையில் அறிவித்தார்.

i. காந்தி ஜெயந்தி நாளான அக். 2-ஆம் தேதிமுதல் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் வெளியிட்ட அறிவிப்பு:

- தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தில் மாநகரம், புறநகர்களில் சாதாரண மற்றும் மலைப் பகுதி பேருந்துகளில் 40 கி.மீ. தொலைவு வரை மட்டுமே பயணம் செய்ய அனு மதிக்கப்பட்டு வருகிறது. விரைவுப் பேருந்துகள், எல்எஸ்எஸ், டீலக்ஸ் பேருந்துகள் மற்றும் புறநகர் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் அனுமதிக்கப்படுவதில்லை.
- தற்போது மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை இந்த அரசு விரிவுபடுத்த உள்ளது. அதன்படி, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக். 2-ஆம் தேதிமுதல் அதைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.
- முதல்கட்டமாக மாநகரம், நகரங்களில் சாதாரண பேருந்துகள் மட்டுமன்றி, விரைவுப் பேருந்துகள், எல்எஸ்எஸ், டீலக்ஸ் அரசுப் பேருந்துகளிலும் கட்டணமின்றி மகளிர் பயணம் மேற்கொள்ளலாம். மாவட்டங்களுக்கு

இடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில் சாதாரண கட்டணப் பேருந்துகளிலும் கட்டணமின்றி மகளிர் பயணிக்கலாம்.

- இந்தத் திட்டத்தில் பயன்பெற வருமான உச்சவரம்போ, பயண எண்ணிக்கையில் கட்டுப்பாடுகளோ இல்லை. வெற்றிப் பயணத் திட்டம், இதர சேவைகளிலும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆண்டுக்கு சுமார் ரூ.6,000 கோடி செலவாகக் கூடும் என்றார்.

ii. மூன்றாம் பாலினத்தவருக்கும் சலுகை:

- 'வெற்றிப் பயணம்' திட்டத்தின் கீழ் திருங்கைகள், திருநம்பிகள் உள்ளிட்ட மூன்றாம் பாலினத்தவர் அனைவரும் பயன் பெறலாம். அதன்படி, அவர்களும் இனி முதல்வர் அறிவித்த பேருந்துகளில் கட்டணமில்லா பயணங்களை மேற்கொள்ள முடியும்.

3. விவசாயிகள், பொது மக்களின் நலனைக் காப்பதற்காக பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை தமிழக அரசு கைவிடுவதாக முதல்வர் ச.ஜோசப் விஜய் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

4. ஈரான் மீது மேலும் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா தயாராகி வரும் நிலையில், அந்த நாட்டின் ரியால் பண மதிப்பு வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்தது.

i. முன்னதாக, ஈரான் மீது வரலாற்றிலேயே மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக அமெரிக்கா கடந்த வாரம் அறிவித்தது. இதைத் தொடர்ந்து ஈரானுக்கு எந்த வகையிலும் உதவிகளை வழங்கும் நாடுகளும் கடும் பொருளாதார விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்தார்.

ii. இதன் விளைவாக அந்நியச் செலாவணி சந்தையில் அமெரிக்க டாலருக்கு நிகரான ரியால் மதிப்பு 20.2 லட்சமாக குறைந்தது. ஈரான் மத்திய வங்கி அமெரிக்க டாலருக்கு நிகாரன ரியால் மதிப்பு 15 லட்சமாக நிர்ணயித்தபோதும் சந்தை மதிப்பே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

iii. கடந்த பிப்ரவரி மாதம் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுத் தாக்குதல் தொடங்குவதற்கு முன்பாகவே அந்த நாட்டின் பண மதிப்பு கடும் சரிவைச் சந்தித்தது. இரட்டை இலக்க பணவீக்கம் மற்றும் வளர்ச்சி சதவீதம்

வீழ்ச்சியடைந்திருந்த நிலையில், 6 மாதங்களாக நடைபெற்றுவரும் தொடர் மோதல்களால் அரிசி விலை 60 சதவீதமும், மாட்டு இறைச்சி விலை 150 சதவீதமும் அதிகரித்துள்ளது. ஈரான் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 5 சதவீதத்துக்கு மேல் சரிவைச் சந்திக்கும் என சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) கணித்துள்ளது.

5. அதிக திறன் கொண்ட வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு வழங்கும் புதிய ஹெச்-1பி நுழைவு இசைவுகளுக்கு (விசா) கூடுதலாக 1.03 லட்சம் டாலர் (சுமார் ரூ.98 லட்சம்) கட்டணம் விதிக்க, அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை பரிந்துரைத்துள்ளது.

i. அமெரிக்காவில் வெளிநாட்டுப் பணியாளர்கள் தங்கிப் பணியாற்ற ஹெச்-1பி நுழைவு இசைவு அளிக்கப்படுகிறது. இந்த நுழைவு இசைவு மூலம், அந்நாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்தியர்கள் அதிக எண்ணிக்கையில் பணியாற்றி வருகின்றனர். அவர்களைத் தொடர்ந்து சீனர்கள் மற்றும் பிற நாட்டினர் பணியாற்றுகின்றனர்.

ii. இந்நிலையில், ஒவ்வொரு ஆண்டும் புதிதாக வழங்கப்படும் வழக்கமான ஹெச்-1பி நுழைவு இசைவுகளின் எண்ணிக்கைக்கு அமெரிக்க அரசு வரம்பு நிர்ணயிக்கிறது. இந்தப் புதிய நுழைவு இசைவுகளுக்கு 1,03,265 டாலர் கட்டணம் விதிக்க, அந்நாட்டு உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை (டிஹெச்எஸ்) பரிந்துரைத்துள்ளது.

iii. ஏற்கெனவே உள்ள கட்டணத்துடன் சேர்க்காமல்...:

- ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கைக்குட்பட்ட நுழைவு இசைவு விண்ணப்பங்களுக்கு மட்டுமே இந்தக் கட்டணம் பொருந்தும். ஏற்கெனவே உள்ள ஹெச்-1பி விண்ணப்பக் கட்டணத்துடன் 1,03,265 டாலரை சேர்க்காமல், அதை தனியாகவும் கூடுதலாகவும் வசூலிக்க, டிஹெச்எஸ் பரிந்துரைத்துள்ளது.
- ஹெச்-1பி நுழைவு இசைவு சார்ந்த பணிகளில் ஈடுபடும் அந்நாட்டின் பல்வேறு அரசு அமைப்புகளின் செலவுகளை ஈடுகட்ட, இந்தக் கட்டணம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கட்டணத்தை தனியாக வசூலிப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயை எளிதாகக் கண்காணித்து, ஒதுக்கீடு செய்து, அதுகுறித்த விவரங்களைத் தயாரிக்க முடியும் என்று டிஹெச்எஸ்ஸின் அறிவிப்பில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரை குறித்து பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்க 30 நாள்கள் அவகாசம் அளிக்கப்பட உள்ளது.

- அமெரிக்காவில் ஹெச்-1பி நுழைவு இசைவு வைத்திருப்பவர்களில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தியர்கள். தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டணம் இறுதி செய்யப்பட்டால், அது இந்தியர்களையும் அவர்களைப் பணிய மர்த்தும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களையும் பெரிதும் பாதிக்கும்.

iv. சட்டபூர்வ குடியேற்றத்தைத் தடுக்க...:

- அமெரிக்காவில் பிற நாட்டவர்கள் சட்டபூர்வமாக குடியேறுவதைத் தடுக்க, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அந்நாட்டில் பணியாற்றும் குடியேற்றச் சட்ட வழக்குரைஞர் எமிலி நியூமன் தெரிவித்துள்ளார்.

v. முன்னதாக புதிய ஹெச்-1பி நுழைவு இசைவுகளை பெறுவதற்கு அந்நாட்டு அதிபர் டிரம்ப் விதித்த 1 லட்சம் டாலர் கட்டணம் சட்டவிரோதமானது என்று தெரிவித்து, அதை அந்நாட்டு நீதிமன்றம் ரத்து செய்தது குறிப்பிடத்தக்கது.

## 6. யுபிஐ சேவை அறிமுகப்படுத்தப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், எண்ம பணப் பரிவர்த்தனை 13,000 மடங்கு அதிகரித்துள்ளது.

i. 2016, ஆகஸ்ட் 25-ஆம் தேதி இந்தியாவில் யுபிஐ சேவை அறிமுகமானது. இதையடுத்து, 2016-17 காலகட்டத்தில் 1.78 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், இது 2025-26-இல் 24,162 கோடி பரிவர்த்தனைகளாக உயர்ந்து 13,000 மடங்கு அதிகரித்துள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்தது. இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப் பதாவது:

ii. இந்திய தேசிய பரிவர்த்தனை கழகத்தால் (என்பிசிஐ) அறிமுகப்படுத்தப்பட்டு ரிசர்வ் வங்கியின் மேற்பார்வையில் செயல்பட்டு வரும் யுபிஐ சேவை 2026, ஆகஸ்ட் 25-ஆம் தேதியுடன் 10 ஆண்டுகளை நிறைவுசெய்கிறது. 2016-17-இல் யுபிஐ மூலம் ரூ.7,000 கோடி பரிவர்த்தனை செய்யப்பட்ட நிலையில், 2025-26-இல் ரூ.314 லட்சம் கோடியாக அதிகரித்து 4,000 மடங்கு உயர்ந்துள்ளது.

iii. மாதாந்திர சராசரி பரிவர்த்தனை உயர்வு:

- குறிப்பாக 2026- ஆம் ஆண்டு யுபிஐ பரிவர்த்தனையின் சாதனை மைல்கல் ஆண்டாக பார்க்கப்படுகிறது. ஏனெனில் முதல்முறையாக 2026, மே

மாதத்தில் 2,320 கோடி யுபிஐ பரிவர்த்தனைகள் பதிவாகியுள்ளன. இதன் தொடர்ச்சியாக ஜூலையில் 2,366 கோடி பரிவர்த்தனைகளுடன் 10 ஆண்டுகளில் இல்லாத வகையிலான சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

- இதன்மூலம் கடந்த சில மாதங்களாக யுபிஐ சராசரி மாதாந்திர பரிவர்த்தனை 2,300 கோடியாக உயர்ந்துள்ளது.

iv. ஐஎம்எஃப் அங்கீகாரம்:

- 2016-17-இல் 44 வங்கிகள் மட்டுமே யுபிஐ சேவையில் இணைந்த நிலையில், 2025-26- இல் இது 703-ஆக உயர்ந்தது. 2025-26- ஆம் நிதியாண்டில் மட்டும் 24,162 கோடி பரிவர்த்தனைகள் நிகழ்ந்துள்ளன.
- இந்தியாவின் எண்ம பொது உள்கட்டமைப்பின் முதுகெலும்பாக விளங்கும் யுபிஐ சேவை, எண்மப் பொருளாதாரத்தில் வியாபாரிகள், வணிகர்கள் என அனைவரும் பங்குபெறும் பெரும் தளமாக உருவெடுத்துள்ளது.
- இதன்மூலம் நாட்டில் எண்ம பிளவு குறைக்கப்பட்டு நிதி உள்ளடக்கல் வலுப்படுத்தப்பட்டுள்ளது. யுபிஐ பரிவர்த்தனைகளின் அதிகரிப்பு நாட்டின் வளர்ச்சியையும் பிரதிபலிக்கிறது.
- உலகின் மிகப்பெரும் பரிவர்த்தனை அமைப்பாக யுபிஐ சேவையை சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) அங்கீகரித்துள்ளது.

v. 11 நாடுகளில் யுபிஐ:

- ஒரு நாளைக்கு சராசரியாக 66 கோடி பரிவர்த்தனைகள் இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிறது.
- அரபு ஐக்கிய அமீரகம், பிரான்ஸ், பூடான், இலங்கை, நேபாளம், சிங்கப்பூர், மோரீஷஸ், கத்தார், கம்போடியா, கிரீஸ் மற்றும் மாலத்தீவு ஆகிய 11 நாடுகளில் யுபிஐ செயல்பாட்டில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

7. கோதுமை மற்றும் கோதுமை சார்ந்த பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய விதிக்கப்பட்டிருந்த தடையை மத்திய அரசு நீக்கியது. இந்த தடைநீக்கம் உடனடியாக அமலுக்கு வந்தது.

i. சர்வதேச அளவில் கோதுமை விநியோகத்தை சீராக வைத்திருக்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டுள்ளது. சுமார் 4 ஆண்டுகளாக நீடிக்கும் ரஷியா- உக்ரைன் போரால் சர்வதேச அளவில் கோதுமை உற்பத்தி, விநியோகம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தியா கோதுமை ஏற்றுமதியை அனுமதிக்க வேண்டும் என்று ஐரோப்பிய

நாடுகள் உள்பட பல நாடுகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தன.

ii. கோதுமை அதிகம் விளைவிக்கும் நாடுகள் பட்டியலில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நாட்டில் விநியோகத்தை சீராக வைத்திருக்கும் நோக்கிலும், விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காகவும் கடந்த 2022 மே மாதத்தில் கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது.

iii. இப்போது சுமார் 4 ஆண்டுகளுக்குப் பிறகு தடை நீக்கப்பட்டுள்ளது. கோதுமை மட்டுமல்லாது அதில் இருந்து தயாரிக்கப்படும் மைதா, ரவை, முழுக் கோதுமை மாவு உள்ளிட்டவற்றின் ஏற்றுமதிக்கும் தடை நீக்கியுள்ளது. வெளிநாட்டு வர்த்தகத் துறை இயக்குநரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், கோதுமை விவசாயிகளுக்கு பயன் கிடைக்கும்.

## 8. இந்தியாவில் மரண தண்டனை மற்றும் உலகளாவிய போக்குகள்

i. முக்கிய விவாதம் மற்றும் வரலாற்று ரீதியான விமர்சனங்கள்

- மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு நாகரிக சமூகத்தில், மரண தண்டனை தொடர வேண்டுமா என்பது குறித்து அரை நூற்றாண்டுக்கும் மேலாக தீவிர விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.
- மரண தண்டனை முறை மட்டுமல்லாமல், அதை நிறைவேற்றும் முறையான 'கழுத்தில் கயிறு மாட்டித் தூக்கிலிடுதல்' என்பதும் பரவலான விமர்சனங்களுக்கும் கேள்விகளுக்கும் உள்ளாகியுள்ளது.
- தூக்கிலிடும் முறை உடனடியாக உணர்விழப்பை ஏற்படுத்துவதில்லை என்றும், இது தனிமனித கண்ணியத்தை மீறும் மனிதாபிமானமற்ற, காட்டுமிராண்டித்தனமான செயல் என்றும் மனுதாரர்கள் வாதிடுகின்றனர்.

ii. உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பு மற்றும் சட்டப்பூர்வ செல்லுபடியாகும் தன்மை

- நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு சமீபத்தில் ஒரு வழக்கில் இச்சிக்கல்களை ஆராய்ந்தது.
- இந்திய அரசியலமைப்பின் 21-வது பிரிவின் கீழ் பாதுகாக்கப்படும் வாழ்வுரிமை மற்றும் சுதந்திரத்தை தூக்கிலிடும் முறை மீறுகிறது என்ற வாதத்தை நிராகரித்த அந்த அமர்வு, தூக்கிலிடுவதன் மூலம் விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்ய மறுத்துவிட்டது.

- கயிற்றால் தூக்கிலிடுவது அரசியலமைப்புக்கு உட்பட்ட மற்றும் முறையான தண்டனை நிறைவேற்றும் வழிமுறை என்று 1983-ல் 'தீனா' வழக்கில் (தீனா எதிர் இந்திய அரசு) வழங்கப்பட்ட முக்கிய தீர்ப்பை மாற்றியமைக்க எந்தக் காரணமும் இல்லை என்று நீதிமன்றம் கருதியது.
- பழைய குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு (CrPC) மாற்றாகக் கொண்டுவரப்பட்ட புதிய 'பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா' சட்டத்தின் பிரிவு 393(5)-ல் மரண தண்டனைக்கான விதிமுறை தக்கவைக்கப்பட்டுள்ளது என்பதை அந்த அமர்வு சுட்டிக்காட்டியது.
- மரண தண்டனை விதிக்கப்பட்டாலும், தண்டனை பெற்றவரின் அரசியலமைப்பு மற்றும் சட்டப்பூர்வ பாதுகாப்புகள் முழுமையாக மறைந்துவிடுவதில்லை என்றும், நீதித்துறை இத்தகைய வழக்குகளை மிகுந்த கவனத்துடன் கையாள்கிறது என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

iii. தண்டனை நிறைவேற்ற மாற்று முறைகள் மற்றும் சட்ட ஆணையத்தின் பரிந்துரைகள்

- தண்டனை நிறைவேற்றத்திற்கான மாற்று முறைகள் முற்றிலும் வலியற்ற மரணத்தை உறுதி செய்வதில்லை என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது. மாற்று முறைகள் தண்டனை நிறைவேற்றத்தின் உறுதியான தன்மையை நம்பகத்தன்மையுடன் உறுதி செய்வதில்லை என்றும் மத்திய அரசு வாதிட்டது.
- 2003-ல், 187-வது சட்ட ஆணையத்தின் அறிக்கை, தூக்கிலிடுவதற்குப் பதிலாக 'கொல்லும் ஊசி' (lethal injection) செலுத்துவதை ஒரு மாற்று முறையாகப் பரிசீலிக்கலாம் என்று பரிந்துரைத்தது.
- 2015-ல், 262-வது சட்ட ஆணையத்தின் அறிக்கை, சாதாரண குற்றங்களுக்கான மரண தண்டனையை ஒழிக்கவும், பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் மற்றும் அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தல் ஆகியவற்றுக்கு மட்டும் அதைத் தக்கவைக்கவும் பரிந்துரைத்தது.

iv. இந்தியாவில் நீதித்துறையின் எச்சரிக்கை மற்றும் மரணதண்டனை நிறைவேற்றப் புள்ளிவிவரங்கள்

- 'பச்சன் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம்' (Bachan Singh vs. State of Punjab) வழக்கில், "மிகவும் அரிதானவற்றில் அரிதான" (rarest of rare) வழக்குகளில் மட்டுமே மரணதண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் வரையறுத்தது.

- கடுமையான வழிகாட்டுதல்கள் இருந்தபோதிலும், விசாரணை நீதிமன்றங்கள் தொடர்ந்து அடிக்கடி மரணதண்டனைகளை விதிக்கின்றன; 2016 முதல் 2025 வரையிலான பத்து ஆண்டுகளில், மொத்தம் 1,279 பேருக்கு விசாரணை நீதிமன்றங்களால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- இதற்கு நேர்மாறாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் உச்ச நீதிமன்றம் ஒரு மரணதண்டனையைக்கூட உறுதிப்படுத்தவில்லை. மரணதண்டனை நிறைவேற்றப்பட்டால் அதை மாற்றியமைக்க முடியாது என்பதை உணர்ந்து, நீதித்துறை காட்டும் இந்த உயர்ந்த அளவிலான நிதானம் அதன் எச்சரிக்கையான அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.
- இந்தியா மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு, மரணதண்டனை நிறைவேற்றப்படுவதை இயன்றவரை தவிர்க்கிறது; இதன் விளைவாக, 2003-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தூக்கிலிடப்பட்டவர்கள் எட்டு பேர் மட்டுமே.

v. உலகளாவிய நிலை மற்றும் ஒப்பீடுகள்

- ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, கிரேட் பிரிட்டன் மற்றும் ஜிம்பாப்வே உள்ளிட்ட 110-க்கும் மேற்பட்ட நாடுகள் மரணதண்டனையை முழுமையாக ஒழித்துள்ளன.
- பிரேசில், சிலி, இஸ்ரேல் மற்றும் பெரு போன்ற நாடுகள் சாதாரண குற்றங்களுக்கான மரணதண்டனையை ஒழித்துவிட்டு, போர் குற்றங்கள் போன்ற தீவிர சூழல்களுக்கு மட்டுமே அதை நடைமுறையில் வைத்துள்ளன.
- ரஷ்யா, தென் கொரியா மற்றும் லாவோஸ் போன்ற நாடுகளில் மரணதண்டனை சட்டப்பூர்வமாக நடைமுறையில் இருந்தாலும், கடந்த பத்து ஆண்டுகளில் எந்த மரணதண்டனையும் நிறைவேற்றப்படவில்லை.
- இந்தியா, சீனா, ஈரான், சவுதி அரேபியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 60-க்கும் குறைவான நாடுகளில் மரணதண்டனை முறை தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.
- உச்ச நீதிமன்றத்தின் விக்ரம் நாத் தலைமையிலான அமர்வு மரணதண்டனையை ஒழிக்கவில்லை என்றாலும், மரணதண்டனை முறை தொடர வேண்டுமா என்பது குறித்த உலகளாவிய மற்றும் தேசிய அளவிலான விவாதம் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

9. பிரபஞ்சத்தின் ஆழமான மர்மங்களை ஆராய்வதற்காக, நாசா (NASA) தனது

அடுத்த தலைமுறை விண்வெளி ஆய்வகமாக 'நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளித் தொலைநோக்கியை' (Nancy Grace Roman Space Telescope) உருவாக்கியுள்ளது.

- இத்தொலைநோக்கிக்கு, நாசாவின் முதல் வானியல் பிரிவுத் தலைவராகவும், முதல் பெண் நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றிய நான்சி கிரேஸ் ரோமன் (1925-இல் அமெரிக்காவின் நாஷ்வில்லில் பிறந்தவர்) அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. விண்வெளி சார்ந்த தொலைநோக்கிகளை நிஜமாக்குவதில் அவர் ஆற்றிய முன்னோடிப் பணிக்காக, அவர் "ஹப்பிளின் தாய்" (Mother of Hubble) என்று பரவலாகப் போற்றப்படுகிறார்.

i. தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் (ரோமன் மற்றும் ஹப்பிள் ஒப்பீடு)

- ரோமன் தொலைநோக்கியானது 2.4 மீட்டர் அளவுள்ள முதன்மை கண்ணாடியைக் கொண்டுள்ளது (இது ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கியின் கண்ணாடி அளவிற்கு இணையானது); இருப்பினும், இதன் அகச்சிவப்பு (infrared) பார்வைப் பரப்பு ஹப்பிளை விட 100 முதல் 200 மடங்கு பெரியதாகும்.
- ஹப்பிளின் பார்வையை ஒரு குறுகிய ஜன்னல் வழியாகப் பார்ப்பதுடன் ஒப்பிட்டால், ரோமனின் பார்வையானது ஒரு முழு நகரத்தையும் ஒரே காட்சியில் காண்பதற்கு இணையானதாகும்.
- அதன் பரந்த பார்வைப் பரப்பின் காரணமாக, ஹப்பிளை விட 1,000 மடங்கு வேகத்தில் ரோமன் விண்வெளியை ஆய்வு செய்து வரைபடமாக்க முடியும்.

ii. ஏவுதல் மற்றும் சுற்றுப்பாதை விவரங்கள்

- இந்த விண்கலம், புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து 'ஸ்பேஸ்எக்ஸ் ஃபால்கன் ஹெவி' (SpaceX Falcon Heavy) ராக்கெட் மூலம் ஆகஸ்ட் 30 அன்று (ஏவப்படும் ஆண்டில்) விண்ணில் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இதன் முக்கிய கட்டமைப்பு நாசாவின் கோடார்ட் விண்வெளிப் பறப்பு மையத்தில் (Goddard Space Flight Center) ஒருங்கிணைக்கப்பட்டு சோதிக்கப்பட்டது.
- இந்த ஆய்வகம், பூமியிலிருந்து 15 லட்சம் கிலோமீட்டர் (1.5 மில்லியன் கி.மீ) தொலைவில் அமைந்துள்ள 'சூரியன்-பூமி லாக்ராஞ்ச் புள்ளி 2' (L2)-ஐச்

சுற்றியுள்ள 'ஹாலோ சுற்றுப்பாதையில்' (halo orbit) செயல்படும்.

- L2 புள்ளியில், பூமி மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசைகள் சமநிலை அடைவதால், விண்கலம் மிகவும் நிலையாக இருக்கும். மேலும், இது தொலைநோக்கியை பூமியின் வெப்பம் மற்றும் ஒளியிலிருந்து தனிமைப்படுத்தி வைக்கிறது; இது உணர்திறன் மிக்க அகச்சிவப்பு ஆய்வுகளுக்கு ஏற்ற சூழலாகும். ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியும் இதே சுற்றுப்பாதைப் புள்ளியையே பயன்படுத்துகிறது.

iii. முதன்மை அறிவியல் நோக்கங்கள்

- பிரபஞ்சத்தின் விரிவடைதலைத் துரிதப்படுத்தும் மர்மமான விசையான 'இருண்ட ஆற்றலை' (Dark Energy) ரோமன் ஆய்வு செய்யும். 1998-இல் கண்டறியப்பட்ட இந்த விசையை, 'பேரியான் அக்கோஸ்டிக் ஆஸிலேஷன்ஸ்' (baryon acoustic oscillations), தொலைதூர சூப்பர்நோவாக்கள் மற்றும் 'பலவீனமான ஈர்ப்பு லென்சிங்' (weak gravitational lensing) ஆகியவற்றைப் பயன்படுத்தி அது வரைபடமாக்கும்.
- 'இருண்ட பொருளின்' (Dark Matter) பரவலை இது வரைபடமாக்கும். இது கண்ணுக்குத் தெரியாத ஒரு பொருளாகும்; ஏனெனில் இது ஒளியை வெளியிடுவதோ அல்லது உறிஞ்சுவதோ இல்லை, ஆனால் விண்மீன் திரள்கள் (galaxies) மீதான அதன் ஈர்ப்பு விசை மூலம் இதனை அறிய முடியும்.
- ஈர்ப்பு நுண்வில்லை முறை (gravitational microlensing) எனப்படும் ஒரு நுட்பத்தைப் பயன்படுத்தி, ரோமன் விண்கலம் தொலைதூர நட்சத்திரங்களைச் சுற்றிவரும் ஆயிரக்கணக்கான புதிய கோள்களைக் கண்டுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில், நட்சத்திரங்களிலிருந்து வெகு தொலைவில் உள்ள குளிர் கோள்கள் மற்றும் தன்னிச்சையாக மிதக்கும் "திசைமாறிக்" கோள்களும் அடங்கும். பூமி போன்ற உலகங்கள் எவ்வளவு பொதுவானவை என்பதைத் தீர்மானிக்க இது விஞ்ஞானிகளுக்கு உதவும்.
- பில்லியன் கணக்கான விண்மீன் திரள்களின் படங்களைப் பிடிப்பதன் மூலம், பெருவெடிப்புக்குப் பிறகு பிரபஞ்சத்தின் அமைப்பு எவ்வாறு பரிணமித்துள்ளது என்பதை இது கண்டறிந்து, ஒரு பிரம்மாண்டமான முப்பரிமாண அண்ட வரைபடத்தை உருவாக்கும்.

iv. அறிவியல் கருவிகள்

- அகலப் புலக் கருவி (Wide Field Instrument): இந்த முதன்மை அறிவியல் கேமரா, வானத்தின் பெரும் பகுதிகளைப் படம்பிடிப்பதற்காக ஒரு பிரம்மாண்டமான 300-மெகாபிக்சல் அகச்சிவப்பு உணரியைக் கொண்டுள்ளது.
- ஒளிவட்ட வரைவிக் கருவி (Coronagraph Instrument): இந்த மேம்பட்ட கருவி, நட்சத்திரங்களின் கண் கூசும் பிரகாசத்தைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதன் மூலம், அந்த நட்சத்திரங்களைச் சுற்றிவரும் மிகவும் மங்கலான கோள்களை வானியலாளர்கள் நேரடியாகப் படம்பிடித்து பகுப்பாய்வு செய்ய இது அனுமதிக்கிறது. இது, வாழத் தகுதியான உலகங்களைக் கண்டறியும் எதிர்காலப் பயணங்களுக்கு முக்கியத் தொழில்நுட்பங்களாக அமைகிறது.

v. மரபும் முக்கியத்துவமும்

- கோப் (COBE), ஹப்பிள், சந்திரா, ஸ்பிட்சர் மற்றும் ஜேம்ஸ் வெப் ஆகியவற்றின் சாதனைகளின் அடிப்படையில், விண்வெளி சார்ந்த வானியலின் மரபில் ரோமன் அடுத்த முக்கியப் படியாகத் திகழ்கிறது.
- 2030-களில் அதன் உச்சகட்ட செயல்பாட்டுக் கட்டத்தை அடையவிருக்கும் இது, பிரபஞ்சத்திற்கான நமது புதிய சாளரமாகச் செயல்படும். இது அண்டத்தைப் பற்றிய நமது புரிதலை மறுவடிவமைப்பதாகவும், பிரபஞ்சம் எப்படித் தொடங்கியது, அது எப்படிப் பரிணமித்தது, நாம் தனியாக இருக்கிறோமா? போன்ற அடிப்படைக் கேள்விகளுக்குப் பதில்களைத் தேடுவதாகவும் உறுதியளிக்கிறது.